இணைப்பு IV

(212 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 44-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

அறிவிப்புகள், 2010-2011

1. வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு வழங்கும் வகையிலும், சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள மக்களும் பயன் பெறும் வகையிலும், இவர்கள் உற்பத்தி சார்ந்த தொழிலை தொடங்கினாலோ அல்லது சேவை மற்றும் வணிகம் சார்ந்த தொழில்களை துவங்க விரும்பினாலோ, அவர்களுக்கு உதவிடும் வகையில், 15 விழுக்காடு மானியத்துடன் அதிகபட்சமாக ரூ.5.00 இலட்சம் வரை வங்கிகள்மூலம் கடனுதவி வழங்கி "வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்" என்ற புதிய திட்டம் நடப்பு ஆண்டு முதல் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தின்மூலம் சுமார் ரூ.100.00 கோடி திட்ட மதிப்பீட்டில் 10,000 பேருக்கு சுய வேலைவாய்ப்பு உருவாக்கப்படும்.

2. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கை 2008-ன்கீழ் மானியம் பெறும் வகையில் கூடுதலாக 15 தொழில்கள் சேர்த்தல்

2008 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கையின்படி மானியங்களைப் பெற தகுதியில்லாத தொழில்களின் எண்ணிக்கை தற்போது 39 ஆக உள்ளது. தமிழகத்தில் ஏராளமான நூற்பாலை, நெசவாலை, பின்னலாடை உற்பத்தி செய்யும் ஜவுளி தொழில்கள் இருந்தாலும், மேற்படி தொழில்கள் இந்த மானியம் பெற தகுதியற்ற தொழில்களின் பட்டியலில் உள்ளன. நடப்பு ஆண்டு முதல், நூற்பாலை, நெசவாலை, பின்னலாடை உற்பத்தி உள்ளிட்ட கீழ்க்காணும் 15 தொழில்கள் மேற்படி மானியங்களைப் பெற தகுதி அடையும் வகையில் வழிமுறைகள் மாற்றியமைக்கப்படும்.

2010 ஏப்ரல் 21]

1. பாப்கார்ன் மற்றும் ஐஸ்கிரீம் தயாரித்தல்
2. கலப்பு உரம் தயாரித்தல்
3. ஜவுளி ஆலைகள் (நூற்பாலை மற்றும் பின்னலாடை உட்பட)
4. மாவு அரைவு தொழில்
5. உணவு விடுதிகள்
6. சமையல் எண்ணெய் மற்றும் கரைப்பான்களை உபயோகித்து எண்ணெய் பிரித்தெடுத்தல்
7. அரிசி ஆலை
8. வெல்லம் தயாரித்தல்
9. நிழற்படம் எடுத்தல் மற்றும் வண்ண நிழற்படம் தயாரித்தல்
10. ஒளி அச்சு நகல் எடுத்தல்
11. மின்சலவை தொழில்
12. செங்கல் தொழில் (சிமெண்ட் ஹாலோ பிளாக், இயந்திரங்கள்மூலம் மற்றும் நிலக்கரி சாம்பலிலிருந்து தயாரிக்கப்படும் செங்கல் தவிர)
13. காப்பி கொட்டை வறுத்தல் மற்றும் அரைத்தல்
14. கடிகாரம் பழுது பார்த்தல்
15. ஒளி மற்றும் ஒலி நாடா பதிவு செய்தல்

3. தொழில் நிறுவனங்கள் மானியங்களைப் பெற விண்ணப்பிக்க வேண்டிய கால அளவு 6 மாதத்திலிருந்து 1 வருடமாக உயர்த்துதல்

தற்பொழுது புதிய நிறுவனங்கள் மானியங்களைப் பெற, உற்பத்தி துவங்கிய நாளிலிருந்து 6 மாதத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும் என உள்ளது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களைச் சார்ந்த பல்வேறு தொழில் நிறுவன சங்கங்கள் (Associations) விடுத்த கோரிக்கைகளை ஏற்று, இந்த விண்ணப்ப கால அளவை 6 மாதத்திலிருந்து 1 வருடமாக உயர்த்தப்படும்.

4. வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துதல்

தொழில் திறன் படைத்தோர் மற்றும் தொழில் பயிற்சி பெற்றோர், வேலையற்று இருக்கும் நிலையை அகற்றும் நோக்குடன், இவர்களுக்கு தகுந்த வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரும் வகையில்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் திறன் படைத்தோர் ஆகியோர்களை ஒருங்கிணைத்து, ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்டத் தொழில் மையங்கள்மூலமாக வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படும்.

5. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கை குறித்த வட்டார அளவிலான கருத்தரங்குகள் நடத்துதல்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கையில் குறிப்பிட்டுள்ள மானிய பலன்களை தொழில் முனைவோருக்கு எடுத்துரைத்து, தொழில் துவங்க ஊக்குவிக்க, மாநிலத்திலுள்ள அனைத்து வட்டாரங்களிலும் தொழில் ஊக்குவிப்பு கருத்தரங்குகள் நடத்தப்படும்.

6. குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான குழும மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 15 குழுமத் திட்டங்களுக்கான பொது வசதி மையங்கள் அமைத்தல்

குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான குழும மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ், கீழ்க்கண்ட இடங்களில், குறு மற்றும் சிறு தொழில் நிறுவனக் குழுமங்கள் பயன்பெறும் வகையில் பொது வசதி மையங்கள் அமைக்கப்படும்:

எண்	இடம்	மாவட்டம்	குழுமம்	திட்ட மதிப்பீடு (தோராயமாக ரூ. இலட்சத்தில்)
1	கீழப்பாவூர்	திருநெல்வேலி	அரிசி ஆலை	757.76
2	ஆலங்குளம்	திருநெல்வேலி	அரிசி ஆலை	988.48
3	தஞ்சாவூர்	தஞ்சாவூர்	அரிசி ஆலை	233.66
4	அம்பத்தூர்	திருவள்ளூர்	பொறியியல்	544.36
5	வேலூர்	வேலூர்	பொறியியல்	972.07
6	பரமக்குடி	இராமநாதபுரம்	பொறியியல்	233.39

2010 ஏப்ரல் 21]

7	ஒசூர்	கிருஷ்ணகிரி	தானியங்கி உதிரி பாகங்கள் உற்பத்தி	707.48
8	கரூர்	கரூர்	பேருந்துக்கூண்டு வடிவமைத்தல்	939.00
9	நகரி	மதுரை	ரப்பர் பொருட்கள் உற்பத்தி	500.00
10	கப்பலூர்	மதுரை	பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி	489.12
11	சென்னை	சென்னை	சித்த மருந்துப் பொருட்கள் தயாரித்தல்	45.04
12	நாமக்கல்	நாமக்கல்	லாரி கூண்டு வடிவமைத்தல்	985.32
13	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர்	செயற்கை வைரம் மற்றும் ஆபரணங்கள் தயாரிப்பு	985.00
14	ஈரோடு	ஈரோடு	கயிறு பொருட்கள் உற்பத்தி	486.51
15	சென்னை	சென்னை	ஆயத்த ஆடை உற்பத்தி	125.23
			மொத்தம்	8992.42

7. ஆட்டோ தொழிற்கூட்டுறவு சங்கங்களின்மூலமாக சிறுபான்மையின உறுப்பினர்களுக்கு ஆட்டோக்கள் வழங்கல்

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழக (டாம்கோ) திட்டத்தின்கீழ், தொழில் வணிகத் துறை கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் ஆட்டோ தொழிற்கூட்டுறவு

[2010 ஏப்ரல் 21

சங்கங்களின்மூலமாக சிறுபான்மையின உறுப்பினர்களுக்கு 200 ஆட்டோக்களை ரூ.2.50 கோடி திட்ட மதிப்பீட்டில் கொள்முதல் செய்து வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் 200 உறுப்பினர்கள் பயனடைவார்கள். இத்திட்டம் தாய்கோ வங்கி மூலம் செயல்படுத்தப்படும்.

8. மின் ஆளுமை வசதிகள் ஏற்படுத்துதல்

- சிட்கோவில் இதுகாறும் மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகளையும், தொழிற்கூடங்களையும் பெறுவதற்கான விண்ணப்பங்கள் நேரடியாகவோ அல்லது அஞ்சல் மூலமாகவோ மட்டும் பெறப்பட்டு வந்தன. தொழில் முனைவோர்களின் சிரமத்தைக் குறைக்கும் பொருட்டு, இந்த நிதியாண்டில் (2010-11) இணையதளம் (Online) வாயிலாக விண்ணப்பிக்க வசதிகள் செய்யப்படும்.
- குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மானியம் பெற மாவட்டத் தொழில் மையங்களில் பெறப்படும் மூலதன மானிய (Capital Subsidy) விண்ணப்பங்களின் தற்போதைய நிலை குறித்து இணையதளத்தின் (Online) வாயிலாக உடனுக்குடன் அறியும் வசதி (Tracking of Subsidy Application) நடப்பு ஆண்டில் அறிமுகம் செய்யப்படும்.
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கொள்கை 2008இன் கீழ் வழங்கப்பட்டு வரும் சலுகை திட்டங்களான குறைந்த அழுத்த மின் மானியம் (LTPT Subsidy) மற்றும் மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியம் (VAT Subsidy) ஆகியவற்றைப் பெறுவதற்காக, குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், விண்ணப்பங்களை இணையதளம் வாயிலாக பதிவு செய்யும் முறை நடப்பு ஆண்டு முதல் செயல்படுத்தப்படும்.

9. சிட்கோ தொழிற்பேட்டை ஒதுக்கீட்டில் முன்னுரிமை

சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின்மூலமாக ஆரம்பிக்கப்படவுள்ள புதிய தொழிற்பேட்டைகளில் மேம்படுத்தப்படும் மனைகளில், 10 விழுக்காடு தாழ்த்தப்பட்ட/ பழங்குடியினர் மற்றும் திருநங்கை ஆகியோருக்கு ஒதுக்கீட்டில் முன்னுரிமை வழங்கப்படும்.

2010 ஏப்ரல் 21]

10. தூத்துக்குடி மாவட்டத்தில் மீன் குழும தொழிற்பேட்டை அமைத்தல்

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் வட்டம், பிடாநேரி கிராமத்தில் மீன் தொழில் வளர்ச்சிக்கு ஏதுவாக மீன் பிடி தொழில் சம்பந்தமான உற்பத்திப் பொருட்கள் சார்ந்த மீன் குழும (Fish Cluster) தொழிற்பேட்டை ஒன்று தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின்மூலம் அமைக்கப்படும்.

11. வேலூர் மாவட்டத்தில் தோல் குழும தொழிற்பேட்டை அமைத்தல்

வேலூர் மாவட்டம், வாணியம்பாடியில் 7 ஏக்கர் நிலப்பரப்பில், தோல் பொருட்கள் சம்பந்தப்பட்ட தோல் குழும (Leather Cluster) தொழிற்பேட்டை ஒன்று தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின்மூலம் அமைக்கப்படும். இத்திட்டத்திற்கு சுமார் ரூ.10.00 கோடி செலவிடப்படும்.

12. புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்குதல்

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின்மூலம் கீழ்க்கண்ட 10 இடங்களில் புதிய தொழிற்பேட்டைகள் அமைப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்:

எண்	மாவட்டம்	வட்டம்	கிராமம்	தேர்வு செய்யப்பட்ட நிலத்தின் அளவு (ஏக்கரில்)
1.	தஞ்சாவூர்	தஞ்சாவூர்	பாலையப்பட்டி	103.03
2.	புதுக்கோட்டை	குளத்தூர்	மாத்தூர்	19.92
3.	கரூர்	கிருஷ்ணராயபுரம்	மணவாசி	121.58
4.	வேலூர்	ஆற்காடு	அல்லாலசேரி மற்றும் நாகலேரி	40.00
5.	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர் (தெற்கு)	மயிலேரி பாளையம்	22.23

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 21

6.	திருவள்ளூர்	திருவள்ளூர்	காவேரிராஜபுரம்	200.00
7.	திருவள்ளூர்	ஊத்துக்கோட்டை	ஏனம்பாக்கம்	200.00
8.	விருதுநகர்	சாத்தூர்	சத்திரப்பட்டி	60.00
9.	விழுப்புரம்	திண்டிவனம்	பட்டணம்	103.62
10.	திருநெல்வேலி	பாளையங்கோட்டை	பொன்னாகுடி	96.90

13. சென்னை மாநகரில் சிட்கோ வர்த்தக மையம் அமைத்தல்

சிறு தொழில்களின் வளர்ச்சியை மேம்படுத்தும் பொருட்டு, கிண்டி தொழிற்பேட்டையில்,

1. *குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் சார்ந்த கண்காட்சி மையம்;*
2. *கருத்தரங்கு கூட்ட வளாகம்;*
3. *குறு மற்றும் சிறு தொழில் முனைவோர்களுக்கான பயிற்சி மையம் ஆகியவற்றை உள்ளடக்கிய சிட்கோ வர்த்தக மையம் (SIDCO Trade Centre) ஒன்று ஏற்படுத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS